[1987 மார்ச் 27

(ஆ) வறட்சி குறித்து வெள்ளை அறிக்கை—அளிப்பது குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொடர்ந்து நான்காவது ஆண்டாக இந்த ஆண்டும் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலும், தமிழகத்திலே இருக்கின்ற எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலும், வரி வஜா பற்றி இந்த மன்றத்திலே எல்லா உறுப்பினர்களாலும் பேசப்பட்டது. மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் மேதகு ஆளுநர் உரைக்கு பதில் தெரிவிக்கின்ற நேரத்திலே எங்கெல்லாம் வறட்சி நிலவுகின்றதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு கிடைத்திருக்கின்ற தகவல்படி எங்கெல்லாம் வறட்சியினால் நஞ்சை பாதிக்கப்பட்டிருக்கின்றதோ அங்குதான் வரி வஜா செய்து இருக்கிறார்கள். பெரும்பாலான இடங்களில் புஞ்சைகள் பாதிக்கப்பட்டும் அங்கே வரி தவிர மற்ற கிஸ்தி போன்ற வசூல் நடந்து கொண்டு இருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. நான் உங்கள் மூலமாக மாண்புமிகு நாவலர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். வறட்சியாலே நஞ்சை, புஞ்சை பாதிக்கப்பட்ட இடங்களில் உடனடியாக வரி வஜா செய்வதற்கும், வரி வசூலை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதோடு, வறட்சி சம்பந்தமான நடவடிக்கைகளைப் பற்றிய வெள்ளை அறிக்கை—white paper —இந்த மாமன்றத்தில் அளிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்ட பொது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது வெள்ளை அறிக்கை தேவையில்லை. அதுபற்றிய நிலைமைகளை அறிந்து, ஆராய்ந்து பதிலுரை தருகின்றபோது தர முடியுமானால் தருகிறேன். இல்லாவிட்டால் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை வரும்போது விவரமான அறிக்கைகளைத் தரலாம். இருக்கின்ற விவரங்களை 20 மாவட்டங்களிலிருந்து திரட்ட வேண்டும். ஆகவே, திரட்டி, இருக்கின்ற சூழ்நிலையை ஒட்டி என்ன நடவடிக்கை

1987 மார்ச் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற முழு விவரத்தையும் தர வேண்டுமென்றால் கூடுமானவரையில் பதிலுரையின்போது விவரம் வருமேயானால் தரலாம். இல்லாவிட்டால் தனியாகத் தரலாம். இதற்கென்று தனி வெள்ளை அறிக்கை இப்போது வைக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்படாது.

(இ) உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

திரு. அ. பாலுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் மூலமாக, அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டைத் தொகுதியை மட்டும் வறட்சிப் பகுதியாக ஆக்கவில்லை என்ற அவசர முக்கிய தீர்மானம் கொடுக்கப்பட்டுள்ளது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்கள் இன்றைக்கு ஐந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம். பதில் வந்தால் இங்கே வந்து சேரும்.

3. கவன ஈர்ப்பு.

(அ) திருப்பரங்குன்றம் .வெள்ளக்கல் பகுதியில் குடியமர்த்தப் பட்டவர்களுக்கு வசதிகள்.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பரங்குன்றம் தொகுதியில் அவனியாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட வெள்ளக்கல் என்னும் பகுதியில் உள்ள மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான புல் வளர்ப்பு பண்ணை பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு, குடிநீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் கூட நிறுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.